[1973 நவம்பர் 20

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதற்கான புதுச் சேர்க்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் கொடுக்கலாம்.

மருந்து வாழ் மலையில் கிடைக்கும் மூலிகைகள்

*** 205 வினா—திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் பகுதியில் மருந்துவாழ் மலையில் கிடைக்கும் மூலிகைகள்குறித்து ஆய்வு ஏதேனும் மேற்கொள்ளப்பட்டு உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் அமைந்துள்ள மூலிகைச் செடிகள் ஆய்வுப் பிரிவினால் (Survey of Medicinal Plants Unit) மருந்துவாழ் மலையின்கண்ணுள்ள மூலிகைச் செடிகளைப்பற்றி முன் ஆய்வு (Preliminary Survey) ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அம்மலையி லுள்ள மூலிகைச் செல்வத்தின் நிலை ஊக்கமூட்டுவதாகவும், குறிப் பிடத்தக்கதாகவும் இல்லையென அவ்வாய்விலிருந்து அறியப் பட்டது.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, அந்த மலையிலே யிருக்கும் மூலிகைகள் தொழுநோயைக்கூடச் சரிப்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, மீண்டும் அதைப்பற்றித் தீவிரமாக அரசு கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அது என்ன மூலிகை என்று பெயரையும் சொல்ல வேண்டும். ஏனென் றால் தொழுநோயைக் குணப்படுத்தும் மூலிகை என்று இரண்டு, மூன்று மூலிகைகளைப் பல சித்த மருத்துவர்கள் குறிப்பிடுவது அறிந்திருக்கக்கூடியதாகும். அங்கேயிருந்து கிடைக்கும் மூலிகைகள் மற்ற இடங்களிலும் கிடைக்கும் சாதாரண மூலிகைகளே என்றும் தெரிவித்திருக்கிறார்கள். கிடைத்த மூலிகைகளின் பெயரை வேண்டுமானால் கூறுகிறேன். ஆங்கிலத்திலே தரப்பட்டுள்ள அந்த விஞ்ஞானப் பெயர்களைப் படித்தால்கூட நமக்கு விளங்கப் போவதில்லை. தமிழில் சிவனார்வேம்பு, இருப்பு முறி, செப்பு நெரிஞ்சில், சிறுபுள்ளடி, வெண்கொடி வேலி, கருட நகம், நஞ்சறுப்பான் என்ற இந்த மூலிகைகள் மட்டும்

1973 நவம்பர் 20]

கிடைக்கின்றன என்றும், இவையும் மற்ற மலைகளிலும், மற்ற இடங்களிலும் கிடைக்கும் மூலிகைகள்தான் என்பதால் தனியாக அந்த மலைப்பகுதி சிறப்பு மூலிகைக்குரிய இடம் என்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மேலும் ஏதாவது மூலிகைகள் கிடைத்தால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: தலைவரவர்களே, இந்த மூலிகை ஆராய்ச்சியிலே பலன் அதிகம் கிட்டாது என்று சொன்னுர்கள், அந்த ஆராய்ச்சியை யார் நடத்தினுர்கள்? முறைப்படி அலோபதி மருத்துவர்களால் நடத்தப்பட்டதா அல்லது சித்த வைத்தியர்களால் நடத்தப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்படிப்பட்ட ஆராய்ச்சியில் அலோபதி மருத்துவர்களாகயிருந்தாலும், சித்த வைத்தியர்களாக இருந்தாலும், தாவர நூல் அறிஞர் துணை கொண்டே ஈடுபட வேண்டும். 'பொட்டானிகல் சயின்ஸ்'-ல் பயிற்சி பெற்ற, தாவர நூல் பயிற்சி பெற்ற துணைப் பேராசிரியர் பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரியில் இருக்கிறுர், அவரோடு சித்த மருத்துவர்களும் இணைந்து, கிடைத்த மூலிகைகளைப் பரிசீலித்திருக்கிறுர்கள்.

மதுரைக்கு இந்திய முறை மருத்துவ மனை

* **206 வினு—திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரில் பெரிய அளவில் இந்திய முறை மருத்துவ மனை ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு பெண் மருத்துவர்கள்

* **207 வினு—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பிரதம சுகாதார நிலையங்களில் பணியாற்றும் இரு மருத்துவர் பதவிகளுள், ஒரு பதவிக்குப் பெண் மருத்துவரையே நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?